Dr. H. V. HANDE : On a point of order, Sir, please allow a half-hour debate or a little more time for this very important question. I have been raising my hand for the last three or four minutes.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எல்லாக் கேள்விகளுக்கும் துணைக் கேள்விகள் கேட்க இடமளிக்க முடியாது. ஒரு மணி நேரந்தான் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 20 கேள்விகள் இருக்கின்றன. ஒரு கேள்விக்கு ஐந்து நிமிடம் என்று வைத்தாலும் கூட, அவற்றை முடிக்க முடியாது. தாங்கள் குறிப்பிடும் கருத்துக்களை இன்றைக்குப் பேரவைமுன் வைக்க இருக்கும் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது குறிப்பிடலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னமும், கல்வி மானியத்திற்கு இரண்டு நாள் போதுமா, அதிகம் வேண்டுமா என்பதை பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் தீர் மானிக்க இருக்கிறோம்.

Dr. H.V. HANDE : I will ask only one supplementary question.

Mr. SPEAKER : No. No.

மதிய உணவுத் திட்டம்.

*** வினு 113.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதிய உணவுத் திட்டத்திற்காக "கேர்" நிறுவனம் இதுவரை (1969 மார்ச் வரை) தமிழகத்திற்கு எவ்வளவு பணம் தந்துள்ளது ?

(இ) இந்தப் புதிய திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 17,57,20,000 ரூபாய்.

(இ) இந்தப் புதிய திட்டம் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங் களிலும், நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இந்த நிறுவனத்தின் உதவியால் எத்தனை மாணவர்கள் பயன் பெறுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ரூ. 17 லட்சம் அளவில் 29,000 மாணவர்கள் 200 நாட்களுக்குப் பயன் பெறுகிறார்கள்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, மதிய உண விற்காக சர்க்கார் ஆறு பைசாவும், பொதுமக்கள் நன்கொடை பஞ்சாயத்துக் கள் மூலம் 4 பைசாவும், ஆக 10 பைசா என்று கணக்கு வைத்துச் செய்வதில், பொதுமக்களிடமிருந்து வருவதில்லை. ஆகவே, கணக்கு பத்து பைசா என்று இருந்தாலும், ஆறு பைசாவையே செலவழித்து விட்டு, கணக்குக் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, இந்த நான்கு பைசாவை யும் அரசாங்கமே கொடுத்து, 10 பைசாவிற்கும் மதிய உணவு கொடுக்க முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி "கேர்" நிறுவனத் தின் உதவி பற்றியது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதிய உணவுக்காகப் பொதுமக்கள், ஊராட்சி மன்றங்கள் கொடுப்பது குறைவாக இருக்கிறது. அதோடு "கேர்" நிறுவனத்தின் சார்பில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மத்திய சமையல் அறை கட்டப்பட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. இப்பொழுது செங்கற்பட்டில் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு 30 ஊராட்சி ஒன்றியங்களில் இப்படி மத்திய சமையல் அறை கட்டத் திட்டமிட்டிருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்த சமையல் அறை வந்துவிட்டால், இந்தக் குறைபாடு பெரும் அளவிற்குக் குறைந்துவிடும். ஆறு பைசா என்று கொடுக்கும்போதே சர்க்கார் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மதிய உணவிற்காகச் செலவழிக்கிறார்கள்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க "கேர்" ஸ்தாபனமும், சர்க்காரும் உதவி அளிக்கிறார்கள். ஆனாலும் இந்த வேலையில் ஆசிரியர்கள் பயன்படுத்தப்பட்டு, தங்கள் ஆசிரியக் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்கள் பொறுப்பு இல்லாமல் இந்த மதிய உணவுத் திட்டத்தை அமுல் படுத்த சர்க்கார் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அத்தகைய குறைகள் பெரும் அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில், இந்தத் திட்டத்திற்குத் தூண்டுகோலாக இருந்து சமூகப் பணி என்ற வகையில் பணிபுரிகிறார்கள். முன்பு குறிப்பிட்டது போல, மத்திய சமையல் அறை வந்துவிட்டால், இவர்களுக்கு மேற்பார்வை பார்க்கும் பொறுப்புத்தான் இருக்கும். அவர்கள் இதைப் பொதுத் தொண்டில் ஒன்றாகச் செய்வது பாராட்டப் பெறும், போற்றப் பெறும். எங்கும் வற்புறுத்தும் நிலை இல்லை.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, "கேர்" நிறுவனம் தவிர, வெளிநாடுகளிலிருந்து வேறு பல நிறுவனங்களிலிருந்து, அரசுக்கு நேரிடைத் தொடர்பு இல்லாமல், பல்வேறு வகையில் உதவி பெறுவதைத் தடுத்து, எல்லாம் அரசாங்கத்தின் மூலமாகத்தான் பெற வேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல, புகார் இருப்பதாகத் தெரியவில்லை. கூடுமான வரையில் கல்வித் துறையின் மூலமாகத்தான் எல்லாம் செயல்படுத்தப்படுகின்றன. ஏதாவது ஊழல்கள் இருந்தால், அதைச் சுட்டிக் காட்டினால், அவற்றை அகற்றி எல்லாவற்றையும் கல்வித் துறைமூலம் செயல்படுத்த, ஏற்பாடுகள் செய்யப்படும்.

பரமக்குடிக்கு வட்டமைய மருத்துவ மனை.

***114 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் வட்ட மைய மருத்துவமனை (Taluk Headquatrers Hospital) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அண்ட் (இ) : சுமார் ரூ. 9·62 லட்சம் செலவில் 38 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை பரமக்குடியில் கட்ட செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.